10/=

பக்கங்கள் 04

# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 15 புதன்கிழமை மே 17 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

கிளிநொச்சியில்
## பாலியல் விடுதி சுற்றிவளைப்பு



கிளிநொச்சி, விநாயகபுரம் பகுதியில் இயங்கிவந்த பாலியல் தொழில் நடைபெறும் இடமொன்று பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள வீடு ஒன்றில் நான்கு பெண்கள் தங்கியிருந்துள்ளனர். இவர்கள் சட்டவிரோத பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் நீதிமன்றத்தின் உத்தரவோடு குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் அங்கிருந்து நான்கு பெண்களை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட நால்வரும் நாளை கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (அ-13)

# பஸ் பலியெடுத்தது மாணவனை!

## ஊர்காவற்றுறையில் கலவரம்

சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த மாணவனை பேருந்து மோதியதில் ஸ்தலத்திலே மாணவன் பலியாகியுள்ளான். ஊர்காவற்றுறை பாலக்காட்டுச் சந்தியில் இன்று காலை இடம்பெற்ற இச்சம்பவத்தினால் அந்தப் பகுதியில் சிலமணி நேரம் பதற்றமான சூழல் நிலவியது. அங்கு கூடிய பொதுமக்கள் பேருந்தின் கண்ணாடிகளை அடித்து நொருக்கி வன்முறையில் இறங்கினார்கள். உடனடியாகவே அப்பிரதேசத்தில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் பலியாகிய சிறுவன் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவனான ஜெயக்குமார் அகிலன் (வயது -16) என தெரியவருகின்றது. (எ-01)



கிராமசேவகருக்கு
## அடி!

யாழ்ப்பாணம் பாஷையூரில் வாக்காளர் விபரம் சேகரிக்கச் சென்ற கிராம சேவகரை பொதுமகன் ஒருவர் தாக்கினாரென யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமாலை பிறிதொரு கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் ஒருவர் ஜே/ 66 கிராம சேவகர் பிரிவில் உள்ள மகனின் வீட்டு வந்து நின்ற சமயம், குறித்த கிராம சேவகர் வாக்காளர் விபரத்தை திரட்ட சென்றுள்ளார். இதன்போது ஏற்பட்ட தொடர்பாடல் புரிந்துணர்வின்மையால் இருவருக்குமிடையே முரண்பாடு தோன்றியுள்ளது. இதன்போது பொதுமகன் தன்னைத் தாக்கினாரென கிராம சேவகர் பொலிஸில் முறையிட்டார். ஆயினும் தான் தாக்கவில்லை என பொதுமகன் தெரிவித்தார்.

"இது தொடர்பில் இரு தரப்பினரிடையேயும் நான் கலந்து பேசி, பிரதேச செயலர் முன்னிலையில் அவர்களை சமரசம் செய்து வைத்துள்ளேன்" என்று வடமாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் 'எதிரொலிக்கு' தெரிவித்தார். (அ)

## விளக்கமறியல்

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் 10 சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை குறித்த அனை வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கு இன்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம் றியாழ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (உ-01)



வெள்ளைவான் கடத்தலுக்கு
## ஜனாதிபதியே பொறுப்பு

இப்போதைய ஜனாதிபதியும், முன்னாள் ஜனாதிபதிகளுமே வெள்ளை வான் கடத்தல்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும்" என்று வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

"ஜனாதிபதியே முப்படைகளுக்கும் தளபதியாக இருக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளார். எனவே இராணுவம், கடற்படை, வான்படை அதன் கீழ் இயங்கும் ஊர்காவற்படை ஆகியவற்றால் இயக்கப்படும் வெள்ளை வான் கடத்தல் மற்றும் ஏனைய இனக் குழுமங்களினால் மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் படுகொலைகளுக்கும் அந்தக் காலங்களில் ஜனாதிபதியாக இருந்தவர்களே பொறுப்புக் கூற வேண்டும்" என்று சம்பூர் கோவிலுக்கு அருகில் நேற்று நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அனந்தி குறிப்பிட்டார். (அ)

## கொழும்பில் பேரணி



காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான விசாரணையை முன்னெடுக்கும் அலுவலகத்தை விரைவில் அமைக்குமாறு வலியுறுத்தி மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று குறித்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இன்று காலை காலி வீதியிலுள்ள ஜனாதிபதி செயலகத்திலிருந்து பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது.

மத்திய வங்கி குண்டு வெடிப்பு
## கைதியின் தந்தை மரணம்

மத்திய வங்கியில் இடம்பெற்ற குண்டு வெப்பு சம்பவம் தொடர்பாக மகசீன் சிறையில் ஆயுள் தண்டனையை எதிர்நோக்கியுள்ள யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பை சேர்ந்த விக்னேஸ்வரன் பார்த்தீபன் என்பவரின் தந்தையான விக்னேஸ்வரன் நேற்று செவ்வாய்க்கிழமை மரணமடைந்துள்ளார்.

தந்தையின் இறுதி கிரியைகளில் கலந்து கொள்ளுவதற்காக குறித்த அரசியல் கைதியை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதி அவைத் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். (உ-2)

நினைவேந்தலுக்காக...



முள்ளிவாய்க்காலில் நாளை நடைபெறவுள்ள நினைவேந்தலுக்காக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியைச் சுற்றியுள்ள பகுதி சுத்தமாக்கப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. (அ)

## ரணில் திரும்பினார்

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இன்று அதிகாலை 5.30 மணியளவில், கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தார்.

மேற்படி விஜயத்தின் போது, உலக நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்புக் கலந்துரையாடல்களையும், ஒப்பந்தங்களையும் முடித்துக்கொண்டு பிரதமர் திரும்பியுள்ளார். (அ)

கொழும்பிலுள்ள
## படை முகாம்களை அகற்ற அரசு முடிவு

கொழும்பு மாநகர சபை ஆட்சியின் எல்லைக்கு உட்பட்டு காணப்படுகின்ற அத்தனை இராணுவ முகாம்களையும் அகற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்கமைய கொழும்பு நகருக்கு வெளியே அவற்றை இடமாற்றம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேல்,வடக்கு, மத்திய மற்றும் பொறளை ஆகிய தேர்தல் தொகுதிகளில் காணப்படுகின்ற இராணுவ முகாம்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்படவுள்ளன. இதன் முதற்கட்டமாக நாரஹேன்பிட்டியில் உள்ள அரசாங்க தகவல் திணைக்களத்திற்கு அருகிலிருக்கும் பொலிஸ்விசேடபடையணி மற்றும் பம்பலப்பிட்டியிலுள்ள சிவில் பாதுகாப்பு பிரிவு ஆகிய முகாம்களை வேறு இடங்களுக்கு மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. (உ-5)

## மனோகணேசனை பொதுபலசேனா முற்றுகை



அமைச்சர் மனோகணேசனை பதவி விலகுமாறு வலியுறுத்தி இன்று அவரது அமைச்சு அலுவலகம் முன் பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஞானசாரதேரர் தலைமையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் பொதுபலசேனா, சிங்கலே ராவய, சிங்கலே ஆகிய அமைப்புக்கள் பங்குபற்றியிருந்தன.

அதன்போது நடைபெற்ற பேச்சுகளின்போது "இலங்கை பௌத்த நாடு. முஸ்லிம்கள் தங்கள் அடிப்படைவாத நடவடிக்கைகளை கைவிடவேண்டும் இல்லையேல் நல்லிணக்க நடவடிக்கைகளைக் குழப்புவோம்" என குறித்த அமைப்புக்கள் எச்சரிக்கை விடுத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# வைரஸ் தாக்குதலில் திருப்பதிக்கே நாமம்



ஆந்திர மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற திருப்பதி தேவஸ்தானத்தின் கணினிகள் ரான்சம்வேர் வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் 20 கணினிகள் இவ்வாறு வைரஸ் தாக்குதலால் பாதிக்கப்பட்டன. இதனால் அந்தக் கணினிகளில் இருந்த நிர்வாக ரீதியிலான தகவல்கள் அனைத்தும் அழிந்துவிட்டன. எனினும் இந்த வைரஸ் தாக்குதலால் பக்தர்களுக்கான சாமி தரிசன சேவையில் எந்த ஒரு பாதிப்பும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



# ஜப்பான் இளவரசி காதல் தியாகம்

ஜப்பான் இளவரசி ஒருவர் தமது காதலுக்காக அரச பதவியை துறந்துள்ளார்.

ஜப்பான் பேரரசர் அக்கிஹிட்டேவின் பேர்த்தியும் இளவரசியுமான மாஹோ, அரச வம்சத்தைச் சேராத ஹியோ கொமொரோ என்ற இளைஞரைக் காதலித்தார். தனது காதலை அவர் குடும்பத்தாரிடம் தெரிவித்தார். எனினும் அரச வம்ச வழக்கப்படி சாதாரண பொதுமகனை மணம் முடித்தால் இளவரசிப் பதவி பறி போவதுடன், அதன் பின்னர் அரசகுடும்பச் சலுகைகளையும் அவர் இழக்க வேண்டியிருக்கும் என பெற்றோர் தெரிவித்தனர். இதனால் “இளவரசிப் பதவி போனாலும் பரவாயில்லை. எனக்கு காதலே வேண்டும்” என காதலரைக் கைபிடிக்க உள்ளார் மஹோ.இளவரசியின் இந்தத் தியாகத்தை ஜப்பான் மக்கள் நெகிழ்ச்சியுடன் சிலாகிப்பதாக கூறப்படுகின்றது.(இ)

# பேஸ்புக் நிறுவனத்துக்கு அபராதம்



பிரான்ஸ் மக்களின் தனிப்பட்ட தகவல்களை அவர்களின் அனுமதியில்லாமல் சேகரித்த பேஸ்புக் நிறுவனத்துக்கு தரவு பாதுகாப்பு நிறுவனம் 160,000 டொலர் அபராதம் விதித்துள்ளது.

பிரான்ஸில் சராசரியாக 33 மில்லியன் மக்கள் சமூக வலைத்தளமான பேஸ்புக்கை பயன்படுத்துகிறார்கள்.

பேஸ்புக் பயன்பாட்டாளர்களின் தகவல்களை அவர்களுக்கு தெரியாமல் பேஸ்புக் நிறுவனம் சேகரித்து வருவது தற்போது அம்பலமாகியுள்ளது.இதனை பாவனையாளர்களும், பிரான்ஸ் அரசும் தரவுப் பாதுகாப்பு நிறுவனத்துக்கு முறையிட்டதாலேயே, இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# வைரஸ் தாக்குதலுக்கு வடகொரியா காரணம்?

உலகின் சுமார் 150-க்கும் அதிகமான நாடுகளில் நடந்த ரான்சம்வேர் கணினி வைரஸ் தாக்குதலில் வட கொரியாவை சேர்ந்த ஹக்கர்களுக்கு தொடர்பு இருக்கலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

உலகம் முழுக்க 150-க்கும் அதிகமான நாடுகளை சேர்ந்த பல்வேறு நிறுவனங்களின் கணினிகளை ‘ரான்சம்வேர்’ வைரஸ் தாக்கியது. உலக அளவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ள ரான்சம்வேர் வைரஸ் பாதிப்பினால் பல்வேறு நிறுவனங்கள் முடங்கியுள்ளன.

உலகம் முழுக்க பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள ரான்சம்வேர் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் குறித்து எவ்வித தகவலும் வெளியாகாமல் இருந்து வந்தது.

இந்நிலையில், தற்போது பாதிப்பை ஏற்படுத்தியுள்ள ரான்சம்வேர் சைபர் குற்றவாளிகள் வட கொரியாவைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என கூகுளில் பணியாற்றி வரும் ஆராய்ச்சியாளர் ஒருவர் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நாய்களின் கொலைவெறி இளம் தாய் அநியாயச் சாவு!



கனடா நாட்டில் இளம்தாய் ஒருவரை 30 தெரு நாய்கள் கூட்டமாக கடித்துக் குதறியதில் அவர் உடல் சிதைந்து பரிதாபமாக பலியாகியுள்ளார்.

கனடாவைச் சேர்ந்த குறித்த 24 வயதான இளம்தாய், தனது 3 வயது மகனுடன் வசித்து வந்துள்ளார். அவர் பணிக்கு சென்றுவிட்டு அதிகாலை 3 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது,அந்த நகரில் சுற்றி திரிந்த 30 தெரு நாய்கள் கூட்டமாக சேர்ந்து அவரைக் கொடூரமாக தாக்கின.இதனால் அவர் உடல் சிதைந்து பலியானார்.

சம்பவ இடத்துக்கு பொலிசார் வந்தபோது பெண்ணின் சடலம் இருந்தஇடத்தை சுற்றி சுமார் 30 தெரு நாய்கள் கூட்டமாக இருந்துள்ளன.

பொலிசாரைக் கண்டு ஒரு நாய் ஆவேசமாக பாய்ந்த போது, பொலிஸார் அதனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுள்ளனர். (இ)

## பாகிஸ்தான் தொடர் தாக்குதல்:

# 1700 பேர் இடம்பெயர்வு




பாகிஸ்தான் இராணுவம் இந்தியஎல்லையில் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி கடந்த 4 நாட்களாக தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ராஜோரி மாவட்டத்தில் நேற்று மாலை மற்றும் நள்ளிரவு வேலைகளில் எல்லையில் இந்திய நிலைகளைக் குறிவைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி உள்ளது.

இன்று காலையிலும் பாலகோடே செக்டாரில் பாகிஸ்தான் ராணுவம் திடீர் தாக்குதலை நடத்தியது. பாகிஸ்தானின் தாக்குதல்களுக்கு இந்திய இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது.

இருதரப்பும் பரஸ்பரம் மோதிக் கொள்வதால், எல்லைக் கிராமங்களில் இருந்து பொதுமக்கள் 1700 பேர் இடம்பெயர்ந்து, அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். (இ)

## பிரிட்டனில்

# சிறுமிகள் மீது துஷ்பிரயோகம் 2 தமிழர்களுக்கு கடூழியச் சிறை



பிரிட்டனில் சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்ட இரண்டு தமிழர்களுக்கு அந்த நாட்டு நீதிமன்றம் நேற்று கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

பிரிட்டனில் வசிக்கும் சகோதரர்களான இளவரசன்( வயது-26.வினோதன் ராஜேந்திரம் (வயது-27) ஆகிய இருவரும் அங்குள்ள வர்த்தக மையங்களில் பணிபுரிந்து வந்துள்ளனர்.இதன்போது கடைக்கு வரும் சிறுமிகளுக்கு இனிப்புகள் வழங்கியும், செல்போனுக்கு இலவச ரீ-சார்ஜ் செய்யும் தம் பக்கம் இழுத்துள்ளனர். சுமார் 9 சிறுமிகள் இவர்களது வலையில் விழுந்துள்ளனர். இந்தநிலையில் இரு சிறுமிகளை தனியான இடத்துக்கு அழைத்துச் சென்று, மது கொடுத்து, பாலியல் துஷ்பிரயோகம் செய்தனர். இதன் பின் குறித்த சிறுமிகள் பொலிஸிடம் தகவல் தெரிவித்தனர். குற்றம் நிரூபணமானதால் இளவரசனுக்கு 22 ஆண்டு கடூழியச் சிறையும், வினோதனுக்கு 18 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டன.

# டோனியும் ஸ்மித்தும் அண்ணன்-தம்பி!





“இந்தியாவும், ஆஸ்திரேலியாவும் விளையாடும் போது தான் டோனியும், ஸ்மித்தும் பகையாளிகள். ஆனால் புனே அணியில் அவர்கள் இருவரும் அண்ணன், தம்பி” என்று பென் ஸ்டோக்ஸ் கூறியுள்ளார்.

இந்தியாவில் தற்போது 10 ஆவது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் லீக் போட்டிகள் முழுவதுமாக முடிந்த நிலையில், இறுதிப் போட்டிக்கு புனே அணி தகுதி பெற்றுள்ளது.

இதற்கு அந்த அணியின் டோனி, ஸ்மித், ஸ்டோக்ஸ், உள்ளிட்ட வீரர்களின் ஒத்துழைப்பே காரணம். “இந்தியாவும் ஆஸ்திரேலியாவும் விளையாடும் போது எலியும் பூனையுமாக இருக்கும் டோனியும், ஸ்மித்தும் எப்படி இணைந்து விளையாடுவார்கள் என்ற சந்தேகம் எனக்கும் இருந்தது. ஆனால் அவர்கள் அண்ணன் தம்பிபோல அந்நியோன்னியமாக பழகுகின்றனர். அதனால் தான் இந்த வெற்றி சாத்தியமானது” என்றார்.

# போராட்டங்களுக்கு தடை




கொழும்பில் நாளையும், நாளை மறுதினமும் நடை பெறவிருந்த ஆர்ப்பாட் டங்களுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட் டுள்ளது.
கொழும்பு முதன்மை நீதி மன்ற நீதிபதியினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப் பட்டது.
பல்கலைக்கழக மாணவர் கள் தரப்பில் இந்த ஆர்ப் பாட்டங்கள் முன்னெடுக் கப்பட விருந்தன.
கல்வி சார்ந்த பிரச்சினை கள் சம்பந்தமாகத் தீர்வைக் காணுதல் மற்றும் சைட் டம் நிறுவனத்தை ரத்து செய்தல் உள்ளிட்ட விட யங்களை வலியுறுத்தி பல் கலைக்கழக மாணவர் ஒன் றியம், மருத்துவ பீட மாண வர் செயற்குழு என்பன குறித்த போராட்டங்களை மேற்கொள்ளவிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

### புதிய அமைச்சர்

# பதவியேற்றார்

வட மத்திய மாகாண சபையின் காணி, நீர்ப் பாசனம், கிராமிய அபி விருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சராக சரத் இலங்கசிங்க இன்று காலை வட மத்திய மாகாண சபையின் ஆளுநர் பீ.பி.திஸா நாயக்க முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றார்.
முன்னதாக அப் பதவியில் இருந்த இருந்த எச்.பி. சோமசிங்க பதவி நீக்கம் செய்யப்பட்ட நிலையில், ஏற்பட்ட வெற்றிடத் திற்கே இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஆ)

# இன்றைய கருத்தோவியம்




### ஹெலிகளால் சேதம்

# இந்தியா நஷ்டஈடு

மோடிக்கு பாதுகாப்பு வழங்கிய ஹெலிகொப்டர்களால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நஷ்டஈடு வழங்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.
மோடி ஹட்டனுக்கு சென்ற போது, இந்தியக் ஹெலிகளால் பொதுமக்களுக்கும் வீடுகளுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன. பெண் ஒருவர் காயமடைந்து டிக்கோயா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் ஹட்டன் டன்பார் மைதானத்திற்கு அருகில் அமைந்துள்ள சமனலகம பிரதேசத்தில் 10 வீடுகள் சேதமடைந்தி ருந்தமையும் குறிப்பிடத் தக்கது. (ஆ)

# இம்மாத இறுதியில் அமைச்சரவை கலையும்

## மனோ திட்டவட்டம்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை இந்த மாத இறுதி வாரத்தில் கலைக்கப்படவுள்ளது என்று தேசிய சகவாழ்வு, நல்லிணக்க அமைச்சர் மனோ கணேசன் திட்டவட்டமாக தெரிவித்தார். அமைச்சரவை மாற்றம் ஒத்திவைக்கப்பட்டிப்பதாகவும், அதுவரை அமைச்சரவை கூட்டம் இடம்பெறாது என்று செய்திகள் வெளியாகிய நிலையில் நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.
எனினும் இந்தக் கூட்டத்திற்கு 30 தொடக்கம் 40 வரையிலான அமைச்சர்களே கலந்துகொண்ட தாக அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறினார். (உ-5)

# இலங்கைக்கு அள்ளி கொடுக்கும் சீனா

இலங்கைக்கு 2 பில்லியன் யுவான் (44 பில்லியன் ரூபா) உதவியை வழங்குவதாக சீன அதிபர் ஷி ஜின்பிங் நேற்று உறுதி அளித் துள்ளார். சீன அதிபர் தலைமை யிலான குழுவினருக்கும் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினருக்கும் இடையில் பீஜிங்கில் நடந்த இரு தரப்பு பேச்சுக்களின் போதே இந்த உறுதி அளிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் இந்த ஆண்டு அபிவி ருத்தித் திட்டங்களுக்காக சீனா 400 மில்லியன் யுவான்களை வழங்கி யுள்ளது. இதற்கு மேலதிகமாக, 2018- 2020 காலப்பகுதியில் 2 பில்லியன் யுவான்களை இலங்கைக்கு வழங்குவதாக சீன அதிபர் உறுதியளித்தார். (எ)

### சுழிபுரம் கடற்கரையில்

# சுற்றுலா மையம்

சுழிபுரம் மேற்கு திருவடிநிலை- சவுக்கடி கடற்கரைப்பிரதேசத்தில் சுற்றுலா மையம் ஒன்றினை நிறுவ நடவடிக் கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.
இதற்கென பிரதேச செயலக காணி பயன்பாட்டுக் குழுவி னால் 10 ஏக்கர் அரச காணி வலிகாமம் மேற்கு பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இச் சுற்றுலா மையம் நிறுவு வதற்கென ஏழு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. (உ-6)

### கொய்யாப்பழ ஆசையால்


# மாணவன் மரணம்



பாடசாலை வளாகத்திலுள்ள கொய்யா மரத்திலிருந்து கீழே விழுந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்தான்.
திம்புல்ல பத்தனை, எதன்சைட் தோட்டத்தை சேர்ந்த 14 வயதுடைய சுப்பிரமணியம் மதுஸன் என்ற மாணவனே இவ் வாறு மரணமானார்.
எதன்சைட் தமிழ் வித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி பயிலும் குறித்த மாணவன் நேற்று மாலை 5 மணியளவில் பாடசாலை வளாகத்திலுள்ள கொய்யா மரத்தில் ஏறிய போது தவறி விழுந்துள்ளார்.
இதனால் படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் மாணவன் அனுமதிக்கப்பட்டிருந்தார்.
எனினும் சிகிச்சை பலனின்றி மாணவன் இன்று காலை மரணமானதாக வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஆ)

# போர்க் கொடி

### மகாநாயக்கர்களுக்கு அதாவுல்லா கடிதம்!



திருகோணமலை எண்ணெய்க் கிணறு களை இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மா னத்துக்கு எதிராக தேசிய காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஏ.எல். எம் அதாவுல்லா போர்க்கொடி உயர்த் தியுள்ளார்.
இதுதொடர்பில் தலையீடு செய்து இந்த முயற்சிகளை தடுத்து நிறுத்தும்படி கண்டி அஸ்கிரிய மற் றும் மல்வத், பீட மகாநாயகர்களுக்கு அவர் கடிதமொன் றையும் அனுப்பிவைத் துள்ளார்.
குறித்த எண்ணெய்க்கிண றுகளை இந்தியாவுக்கு வழங்கினால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு விடும் என்றும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டி யுள்ளார். (உ-5)

### மூதூரில்

# பதற்றம்

திருகோணமலை மூதூரில் சேருநுவர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நீணாக்கேணி கிராமத்திற்குள் நேற்றிரவு புகுந்த சிலர் பொது உடைமைகளுக்கு சேதம் விளைவித்துள்ளனர்.
அதையடுத்து அந்த கிராம வாசிகள் பக்கத்து கிராமமான செல்வநகர் ஹூதா ஜூம்மா பள்ளியை அடுத்துள்ள உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந் தனர். (ஆ)

2 மணி நேரத்தில்
500/=
சம்பாதிக்க வேண்டுமா?
தொடர்புக்கு
021 300 4848



### பாதுகாப்பான கடவைகள்

# வடக்கில் வேண்டும்

வடக்கு மாகாணத்திலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகளை, பாதுகாப்பான கடவைகளாக மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென, நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் வலியுறுத்தியுள்ளார். "கடந்த காலங்களில் பல விபத்துகள் ஏற்பட்டு, பலர் பலியாகியுள்ளனர். தற்போதும்கூட மேற்படி பாதுகாப்பற்ற ரயில் கடவைகளினால் அடிக்கடி விபத்துகள் ஏற்பட்டு, தொடர்ந்தும் பலர் பலியாகி வருகின்றனர். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்." என்றும் அவர் வலியுறுத் தியுள்ளார். (ஆ)

### பறக்கும் சாரதிகள்

# 20,000 பேர் கைது



2017 ஆம் ஆண்டில் இதுவரையான 5 மாத காலப் பகுதியில் அதிவேக வீதியில் விதிகளை மீறிய சுமார் 20,000 சாரதிகள் கைதுசெய்யப்பட் டுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.
இந்தவருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று வரை தெற்கு அதிவேக வீதி மற்றும் கட்டுநாயக்க அதிவேக வீதிகளில், விதிகளை மீறிய 19,837 பேர் இவ்வாறு கைதாகியுள்ளனர். அதி வேகமாக வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டி லேயே பெருமளவானோர் கைதாகியுள்ளதாக பொலிஸார் சுட்டிக் காட்டியுள்ளனர்.

# நாளை நாளும் கோளும்

18.05.2017 வியாழக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 04ஆம் நாள்.

ஷ்டமி பி.ப. 01.41 வரை | திருவோணம் காலை 05.57 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 01.23-02.53 | சுபநேரம் 07.23-08.53 | எமகண்டம் 05.53-07.23

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சிக்கல் | ஆதரவு | சிந்தனை | அமைதி | களிப்பு | வெற்றி | நட்பு | பாசம் | நன்மை | நலம் | சுகம் | உயர்வு |

# அரசாங்கத்துக்கு அக்கறையில்லை



காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றும்போது அரசாங்கத்துக்கு இருந்த அவசரம் அந்த அலுவலகத்தை அமைக்கும் விடயத்தில் குறைந்ததன் காரணம் என்ன என்று ஜே.வி.பி. கேள்வி எழுப்பியுள்ளது. காணாமல் ஆக்கப்படுவதை ஒரு குற்றவியல் குற்றமாக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு தமது கட்சி பூரண ஆதரவை அளிப்பதாகவும் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்த நிலையில் இந்தக் குற்றத்தில் ஈடுபடுவோருக்கு 20 வருடங்கள் அல்ல, அதற்கும் மேற்பட்ட வருடங்களை தண்டனையாக விதிக்க வேண்டும் என்ற யோசனையையும் அவர் இதன்போது முன்வைத்தார். (உ-5)

## நெல்லியடியில் கிடாய்கள் களவு

நெல்லியடி தேவராளிப்பகுதியில் கடந்த சனிக்கிழமை சுமார் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கிடாய் ஆடு ஒன்றும் திங்கட் கிழமை சுமார் 45 ஆயிரம் ரூபா பெறுமதி யான கிடாய் ஆடு ஒன்றும் களவாடப்பட் டுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. வீட்டின் வேலியைப் பிரித்து உள்நுழைந்த திருடர்கள் இக் களவுச் செயலில் ஈடுபட்டதாக தெரியவருகின்றது. தமிழ் பொலிஸாரின் பற்றாக்குறையால் இவ்வாறான சம்பவங் கள் தொடர்பில் முறைப்பாடு செய்வது சிரமமாக உள்ளதாக நெல்லியடி பிரதேச மக்கள் தெரிவித் துள்ளனர். (உ-11)

## அந்த நாள் ஞாபகம்.....!



**1998.05.17**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண நகர முதல்வர் சரோஜினி யோகேஸ்வரன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

### தகவல் அறியும் சட்டம்

# சொத்து விபரங்களை வெளியிட இழுத்தடிக்கும் ரணில், மைத்திரி



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது சொத்து விபரங்களை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொண்டதன் பின்னணி என்ன என்று டிரான்ஸ்பெரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் சந்தேகம் வெளியிட்டுள்ளது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்டிருந்த இந்த விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது சொத்து விபரங்களை வெளியிடாமை பற்றி கடந்த 12ஆம் திகதி தகவல் ஆணைக்குழுவிடம் முறையிட்டுள்ளோம். ஜனாதிபதிக்கு எதிராகவும் முறையிடவுள்ளோம்.

28 வேலைநாட்கள் கடந்துள்ள போதிலும் அந்தத் தகவல்களை வழங்க இருவரும் தவறிவிட்டனர் என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது. (உ-5)

## விபத்தில் சிக்கிய சிறுத்தை மீட்பு



தலவாக்கலை சென்.கிளாயர் பகுதியில் இன்று காலை விபத்திற்குள்ளான நிலையில் சிறுத்தைக் குட்டியொன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் நடமாடிக் கொண்டிருந்த வேளையில் சிறுத்தை வாகனமொன்றில் மோதுண்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சிறுத்தையை மீட்டு தலவாக்கலை கால்நடை வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளதுடன், இது குறித்து மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கும் தகவல்களை வழங்கியுள்ளனர். (உ)

## சந்திரிக்கா–நேபாள ஜனாதிபதி சந்திப்பு



ஐக்கிய நாடுகள் வெசாக் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு விஜயம் செய்த நேபாள ஜனாதிபதி பிந்தியா தேவிபண்டாரி மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் மூலம் இரு நாடுகளுக்கிடையிலான நீண்ட கால வரலாற்று ரீதியான தொடர்புகள் வலுவடைந்துள்ளதாக நேபாள ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (உ-9)

## இறுதியாட்டம் வெள்ளியன்று

“கவிதா ரேடோர்ஸ், வெஸ்ரேன் யூனியன்” அனுசரணையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் பருத்தித்துறை சிரேஷ்ட லீக்குக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையிலான 40 வய துக்கு மேற்பட்டவர்க ளுக்கான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் பிரமாண்ட மாக, மின்னொளியில் நாளைமறுதினம் வெள் ளிக்கிழமை மாலை 6.30மணிக்கு கழக மைதானத்தில் நடைபெற வுள்ளது.

### ஆட்டங்களின் விபரம்

**மூன்றாம் இடத்துக்கான போட்டி**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம்

எதிர்

மயிலிட்டி கண்ணகி வி.கழகம்

**இறுதிப்போட்டி**

சென்அன்ரனிஸ் விளையாட்டுகழகம்

எதிர்

ஆதிசக்தி வி.கழகம்



18 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சமூகப் பாது காப்புத் திட்ட அங்குரார்ப்பண நிகழ்வு இன்று நடைபெற்றது. வலி மேற்கு பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் ச.பிரேமினி மற்றும் யாழ் மாவட்ட சமூக பாதுகாப்பு திட்ட பிரதிப் பணிப்பாளர் பிரதீபன் ஆகியோர் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்தனர். (உ-06)


## செய்தியாளர்கள் தேவை

‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் பிரதேச செய்தியாளர்கள் தேவை.

குறிப்பு: செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் மின்னஞ்சலில் அனுப்பக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் புகைப்படம் மற்றும் சுய விவரங்களை

ethirolimedia@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.




## சந்திப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு சங்க அலுவலர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு அலுவலர்கள் சங்கம் தனது பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியது, அந்த பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை தனக்கு வழங்குமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். (உ-9)


## வாசகர் கவனத்துக்கு...

உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களு டன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே “எதிரொலி”யில் பிரசுரிப்போம். தகவல்களை ethirolimedia@gmail.com என்ற மின்னஞ்சல் முகவ ரியூடாகவோ தொலைபேசி யூடாகவே அனுப்பிவைக்க லாம்.


இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.